# மணிமேகலையின் மாண்பு

முனைவர் கோ. விசயராகவன்
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பி.எட்., பிஎச்.டி.,
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம்
நகர் நிருவாக அலுவலக வளாகம்
முதல் தளம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை
எம்.ஆர்.சி. நகர், சென்னை-600 028.
dir.dtedp@tn.gov.in, dtedp1974@gmail.com

## முன்னுரை

சிலப்பதிகாரத்திற்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமை வாய்ந்த மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். இக்காப்பியத்தின் தலைவி மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் கோவலன் மற்றும் மாதவியின் மகளாவாள். மாதவியின் மகள் மணிமேகலை இந்திர விழாவில் ஆட வருவாள் என பூம்புகார் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனால் மாதவியோ தானும் துறவு பூண்டு தன் மகள் மணிமேகலையையும் துறவு நெறிப்படுத்துகிறாள். தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருப்பதே காப்பியத்தின் இலக்கணம் ஆகும். ஆனால் மணிமேகலைக் காப்பியத்துள் தனக்கு நிகரில்லாத தலைவியாக மணிமேகலையே எடுத்துக்காட்டப்படுகிறாள். மாதவியின் மகளான மணிமேகலை உலக இன்ப நாட்டத்தினை அறவே வெறுத்துப் பௌத்த மதத்துறவி (பிக்குனி) யாகித் தன் பவத்திறம் அறுக என நோற்றுச் சிறப்புப் பெற்றதனைச் செந்தமிழ் நலம் சிறக்க சீத்தலைச்சாத்தனார் காட்டுகிறார். பரத்தையாகப் பிறந்தாலும்

உலகம் போற்றத்தக்க பத்தினியாக வாழமுடியும் என்பதனை மாதவியின் வாழ்வின் மூலமும், பரத்தைக்கு மகளாகப் பிறந்தாலும் உலகம் போற்றும் அறச் செல்வியாக வாழமுடியும் என்று மணிமேகலை மூலமும் ஆசிரியர் உணர்த்துகிறார். இங்கு மணிமேகலையின் தனி மனித மாண்புகள் சிறப்பாக நோக்கப்படுகிறது.

## மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

இந்திர விழாவில் இருவரும் கலந்து கொள்ளாததால் சினமுற்ற அவள் தாய் சித்திராபதி வயந்தமாலையைத் தூதாக அனுப்புகிறாள். அதற்கு மாதவியோ,

மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப்படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீந்தொழில் படாஅள்
(ஊர் அலர் உரைந்த காதை 55 - 57)

என்று மறுத்து விடுகிறாள்.

மாபெரும் பத்தினி - கண்ணகி. அருந்தவப் படுத்தலல்லது - செயதற்கரிய தவ வழியிற் சேர்த்தலையன்றி (1).

மாதவி மகள் மணிமேகலையோ திருந்தியவள். மேலும் சீர்த்திருத்தவாதியும் ஆவாள். அவள் கண்ணகியைத் தாயாக நினைக்கின்றாள். மாதவியும் அவ்விதமே வளர்க்கின்றாள். எனவே தான் இந்திரவிழாவில் ஆட மறுக்கிறாள். தந்தையாகிய கோவலனும் தாயாகிய கண்ணகியும் பட்ட கஷ்டத்தை நினைத்து கண்ணீர் விடுக்கிறாள் (2).

தந்தையும் தாயும் தாம் நனியிழந்த
வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்ப.

(152 - 3)

கோவலன் கொலைப்பட்ட துன்ப நிகழ்ச்சியைப் பற்றி மாதவி கூறக் கேட்ட மணிமேகலை கண்ணீர் வடிக்கிறாள். அவள் கண்ணீர்த்துளி புத்த பிரானுக்காகத் தொடுத்த பூமாலையில் பட்டு புனிதம் இழக்கிறது. அதனால் புதிய பூக்கள் பறித்து வந்து மாலை தொடுக்க மணிமேகலையும் அவள் தோழி சுதமதியும் உவவனம் செல்கின்றனர். மணிமேகலை மேல் காதல் கொண்ட உதயகுமாரன் அவளைத் தொடர்கிறான். அவளைப் பற்றி சுதமதியிடம் கேட்க அவளோ, மணிமேகலை தவஒழுக்கம் மிக்கவர். சபிக்கும் வன்மையும் காலம் கடந்த வாய்மையும் உடையவள் என்கிறாள். மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு மூன்று மந்திரங்களை அருளிச் செய்கிறது. வேற்று உருவம் கொள்ளுதல், பசியைத் தாங்கிக் கொள்ளுதல், வான்வழிச் செல்லுதல் என்பன அவையாகும்.

## நிலையாமை

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றை மணிமேகலை வழி ஆசிரியர் மிகச் சிறப்பாக நிறுவுகிறார்.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது.

(சிறை செய்காதை. வரிகள் 135 - 138)

## சீர்த்திருத்தம்

மணிமேகலை மாபெரும் சீர்திருத்தக் காப்பியம் ஆகும். சங்க காலத்தில் பெருவழக்காக இருந்த கள்ளும் ஊன் உணவும் சமண, பௌத்த சமயங்களால் பெரிதும் கண்டிக்கப்பட்டன. இவ்வகையில் வள்ளுவருக்கு அடுத்தபடியாக சிறந்து நிற்பவர் சாத்தனாரே. சாதுவன், நாகர் குருமகனுக்கு கூறிய அறிவுரைகள் இதைச் சுட்டுகின்றன.

மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கு அறுமாக்கள் கடிந்தனர்
(ஆதிரை பிச்சையிட்ட காதை. 84 - 85)

என்றும்

மூத்துவிளி மாவொழித்து எவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிக.
(ஆதிரை பிச்சையிட்ட வரிகள் 116 - 117)

மணிமேகலை வழி ஆசிரியர் மனித உடலை இழிவானதாகக் கூறுகிறார். உடம்பு புலால் நிறைந்தது. தளர்வது பிணி கூடுவது. குற்றம் புரிவது. கவலையின் கொள்கலம் என்கிறார். பெண்களின் கற்பு, தவசிகளின் நோன்பு ஆகியவற்றை அரசன் பாதுகாக்காவிட்டால் அவை இடர்ப்படும் என இந்நூல் கூறுகிறது.

அறம் என்பது

அறம் என்பது யாதெனக் கேட்பின் எனக்கூறும் மணிமேகலை வாழ்வின் அடிப்படைத் தேவைகளை அனைவர்க்கும் வழங்குவதே அறம் என்கிறாள்.

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் இல்லது கண்டதில்

என மொழிகிறது.

மணிமேகலை சேரநாட்டு வஞ்சி மாநகரில் ஒன்பது சமயக் கணக்கர்களைக் கண்டு அவர்தம் திறம் பற்றிக் கேட்டறிந்தாள். அவள் பின்பற்றியது பௌத்த சமயம். மணிமேகலை பரத்தையர் தொழிலுக்கு அப்பாற்பட்டவள்.

பிறத்தலும் மூத்தலும் பிணியிட்டிருத்தலும்
இறத்தலும் உடையது, இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்.

உடலின் தன்மையை அறிந்தேன். அதனால் வெறுத்து அருள் அறத்தினை விரும்பிச் செல்கிறேன் என்றாள் மணிமேகலை. இவ்வழி பரத்தை முறை ஒழிக என்கிறார் சாத்தனார் (3).

மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்தது. பிக்குணி கோலம் கொண்டு புகாரின் பெருந்தெருவினை அடைந்தாள். பத்தினிப் பெண் ஆதிரை நல்லாளின் பிச்சையினை முதற்கண் ஏற்று அதனால் அமுதசுரபி நிரம்பி, காயச் சண்டிகையின் யானைத்தீ பசிதீர்த்தாள். மேலும் வஞ்சி மாநகர் சென்று எல்லா உயிரும் வருக என்றாள். காணார், கேளார், கால்முடமானோர், பேணாமாக்கள், பேசார், பிணித்தோர், படிவநோன்பயர், பசி நோயுற்றோர், மடிநல்கூர்ந்த மாக்கள் என யாவரும் வந்தனர். இவ்வாறு ஆற்றாமாக்கள் அரும்பசி களைந்தாள்.

சிறைக்கோட்டத்தையும் அறக்கோட்டமாக மாற்றுகிறாள்.

துறவு வாழ்வில் மணிமேகலை

வஞ்சி மாநகர் வந்த மணிமேகலை கண்ணகிக் கடவுளை வணங்குகிறாள். மணிமேகலை கச்சி மாநகர் வந்தடைந்து அந்நாட்டு அரசன் இளங்கிள்ளிக்கு நல்லறம் கூறி நாட்டு மக்களின் பசிப்பிணி போக்குகிறாள். அங்கு தீவ திலகைக்கும், மணிமேகலா தெய்வத்துக்கும் படிமமும், கோயிலும் எழுப்பப்படுகிறது. பௌத்த சமயற் தருக்க நெறிகளை அறவணடிகள் மணிமேகலைக்கு போதிக்கிறார். மணிமேகலை புத்தம் சரணம் கச்சாமி என்ற மந்திரத்தை மும்முறை தியானம் செய்து தன் பவத்திறம் நீங்க நோன்பு மேற்கொள்கிறாள்.

## முடிவுரை

பௌத்த சமயக் கோட்பாடுகள், ஒழுக்கநெறி அரச நெறி, பசி போக்கும் அற மாண்பு, சிறைக்கோட்டங்களை அறக் கோட்டங்களாக மாற்றுதல், கள்ளுண்ணாமை, பரத்தைமை ஒழிப்பு எனப் பல்வேறு சீர்த்திருத்தச் சிந்தனைகள் மணிமேகலை வழி இக்காப்பியம் நமக்கு காட்டுகிறது. மேலும் இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையபாமை என்னும் மூன்று கருத்துக்களையும் இக்காப்பியம் அழுத்தமாகச் சுட்டுகிறது.

ஐம்பெரும் காப்பிய நூல்கள் தமிழன்னையின் ஐந்து அணிகன்களாகவே திகழ்கிறது. இதில் மணிமேகலை மேகலை என்ற இடையணியாகக் கூறுவது சாலச் சிறந்தது.

## துணை நூற்பட்டியல்

1. மணிமேகலை
டாக்டர் உ.வே.சா. பதிப்பு ப.எண் 24
உ.வே.சா. நூல் நிலையம்

சென்னை 2008

2. மணிமேகலை பற்றி
கே.டி.கே. தங்கமணி ப.எண் 32
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை 1998

3. மேலது ப.எண் 140

## இல்ல முகவரி

வி.சக்திசேதுபதி
1/9 எ. மூர்த்தி நகர் முதல் தெரு
செட்டியார் அகரம்,
திருவேற்காடு அஞ்சல் 600 077
கைப்பேசி 74013 37554
மின்னஞ்சல் shakthisethupathi@gmaill.com